# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2121/44 - 2019 මැයි මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.05.02

*2121/44 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/1978* (X) (A).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25 அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹகீம் ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 101137 என்ற பதிவிலக்கத்தைக் கொண்டதுமான எஸ். எல். ரி. கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2019, சனவரி 9 ஆந் திகதிய 2105/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை, அதன் நிரல் I இலும் மற்றும் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற “தகவல் மற்றும் தொடர்பாடல் எந்திரவியலில் எந்திரவியல் சிறப்பு விஞ்ஞான இளமாணி” என்னும் பதிவை உடனடுத்து, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை II இல் முறையே நிரல் I இன் கீழும் மற்றும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.


1A - PG 4500 - 517 (2019/05)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

எஸ். எல். ரி. கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி, விநியோக சங்கிலி முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி, தொழிற்பாடுகள் முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி, கணக்கியல் மற்றும் நிதியியலில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி மற்றும் மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி என்ற பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் மாணவர்களைச் சேர்க்கும்போது,

(அ) க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வர்த்தகத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) "சாதாரண சித்திகள்" (S) என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைக் கற்கை நெறியொன்றுடன் சேர்த்து, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) "சாதாரண சித்திகள்" (S) என்ற நுழைவுத் தகைமைகளுக்கு,

அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி | பிபிஎம்ஜிரி சிறப்பு (சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்) |
| விநியோக சங்கிலி முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி | பிபிஎம்ஜிரி சிறப்பு (விநியோக சங்கிலி முகாமைத்துவம்) |
| தொழிற்பாடுகள் முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி | பிபிஎம்ஜிரி சிறப்பு (தொழிற்பாடுகள் முகாமைத்துவம்) |
| கணக்கியல் மற்றும் நிதியியலில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி | பிபிஎம்ஜிரி சிறப்பு (கணக்கியல் மற்றும் நிதியியல்) |
| மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி | பிபிஎம்ஜிரி சிறப்பு (மனிதவள முகாமைத்துவம்) |

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும்
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2019, ஏப்பிறல் 30.*

*05 - 318*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.